# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 8467/F/2023**

திரு.கோ.இராமன், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 206.

******

## ஆணை

இவ்வாணையம் 21.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.வை.ஆறுமுகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊராட்சிகள்), தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 206 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு தகவல்கள் ந.க.எண்.ஆ2/030/2022, நாள் 24.08.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களில் இனம் 3, மற்றும் 4-க்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது என்றும் மற்ற இனங்களான 1 மற்றும் 2-க்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ✓ **மனுதாரரின் 02.01.2023 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 1 மற்றும் 2 -க்கு சரியான/ திருத்திய தகவல்களை**

**மனுதாரருக்கு “தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய முறையில் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு, அது குறித்த அறிக்கையினையும் Tracking Consignment-யும் இணைத்து 16.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 8467/F/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 206.

**மனுதாரர்**

திரு.கோ.இராமன்,
கிழக்குத் தெரு,
பல்லகச்சேரி கிராமம் (ம) அஞ்சல்,
தியாகதுருகம், வானாபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 206.

Copy to: File NS/PA-